*கவனிக்க .- 13.09.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1829 - 2013 සැප්තැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2013.09.20

*1829 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 834 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 837 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 836 | | |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2013 இன் இல. 287*

*எம்ஓடி /டிஈஎவ்/2/01/ஏஆர்எவ்/ஆர்ஈரீ/336.*

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்*

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, திசெம்பர் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

மேஜர் ஹேனேகமஇிதகொல்ல ஹசித சிரிவர்தன, இபஉப (உ/62780)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, பெப்புருவரி 19.

9-704

---

*2013 இன் இல. 288*

*எம்ஓடி /டிஈஎவ்/2/01/ஏஆர்எவ்/ஆர்ஈஎம்/331.*

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்*

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2013, சனவரி மாதம் 05 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்டன் தென்னகோன் ஹேரத் முதியன்சேலாகே ஓசதீ சேனாரத்ன, இபீப (உ/63861)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, பெப்புருவரி 19.

9-703

---

*2013 இன் இல. 289*

*எம்ஓடி /டிஈஎவ்/2/01/ஏஆர்எவ்/ஆர்ஈஎஸ்/333.*

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமாச் செய்தல்*

2013, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து செயற்படும் விதம் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையைச் சேர்ந்த பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரின் அதிகாரவாணையிலிருந்து இராஜினாமாச் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்டன் வருஷஹன்னதிகே ஷாமிக பிரசாத் சொய்சா, இசைப (உ/67102)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, பெப்புருவரி 19.

9-702

---

*2013 இன் இல. 290*

*எம்ஓடி /டிஈஎவ்/2/01/ஏஆர்எவ்/ஆர்ஈஎஸ்/329.*

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமாச் செய்தல்*

2012, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதியிலிருந்து செயற்படும் விதம் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையைச் சேர்ந்த பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரின் அதிகாரவாணையிலிருந்து இராஜினாமாச் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் ரொமேஷ் டெரன்ஸ் ஜயசுந்தரம், இவைப (உ/68997)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, பெப்புருவரி 19.

9-705

*2013 இன் இல. 291*

*எம்ஓடி /டிஈஎவ்/2/01/ஏஆர்எவ்/ஆர்ஈரீ/332.*

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, திசெம்பர் மாதம் 12 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

இரண்டாம் லெப்டினன்ட் திசாநாயக்க முதியன்சேலாகே காமினி திசாநாயக, இசிரெ (உ/67184)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, பெப்புருவரி 19.

9-706

*2013 இன் இல. 292*

*டி/ஏவ்/718.*

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர உபசேவைக்கு மாற்றம்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதியிலிருந்து இலங்கை நிரந்தர வான்படை சேவையிலிருந்து நிரந்தர உபசேவைக்கு மாற்றப்படுகிறார் :-

எயார் வைஸ் மார்ஷல் இலங்கரத்ன பிரேமனாத் புத்திவிமல லியனகே - (01285) - தொ/பொ

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் அமைச்சு.

பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் அமைச்சு.
கொழும்பு,
2009, யூலை 01.

9-475/1

---

*2013 இன் இல. 293*

*டி/ஏவ்/718.*

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறு கிறார் :-

எயார் வைஸ் மார்ஷல் இலங்கரத்ன பிரேமனாத் புத்திவிமல லியனகே - (01285) - தொ/பொ

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2009, யூலை 01.

9-475/2

# அரசாங்க அறிவித்தல்கள்

## தேசிய மிருகக் காட்சிச்சாலைச் சட்டம்

1982 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க வாசகத்திற்கமைய தேசிய மிருகக் காட்சிச்சாலை சட்டத்திற்கமைய மிருகக்காட்சிச்சாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு தெஹிவளை தேசிய மிருகக் காட்சிச்சாலை மற்றும் பின்னவலை யானைகள் சரணாலயம் என்பவற்றின் நுழைவுச் சீட்டுகளினாலான வருமானம் அந்நிதியத்தின் கணக்கில் வரவு வைக்கப்படும். 2013.10.01 ஆந் திகதியிலிருந்து நுழைவுக் கட்டணம் பின்வருமாறு திருத்தத்திற்கு உள்ளாக்கப்படும்.

(கலாநிதி) டபிள்யூ. விலி கமகே,
செயலாளர்,
தாவரவியல், பூங்காக்கள் மற்றும்
பொது பொழுதுபோக்குத்துறை அமைச்சு.

2013.08.23.

### ஆணைகள்

2013.10.01 ஆந் திகதியிலிருந்து தெஹிவளை தேசிய மிருகக் காட்சிச்சாலை மற்றும் பின்னவலை யானைகள் சரணாலயம் என்பவற்றின் வெளிநாட்டினருக்கான நுழைவுக் கட்டணம் பின்வருமாறு திருத்தப்படும்.

| நுழைவுக் கட்டண வகை | கட்டணம் (ரூபாவில்) |
|---|---|
| வெளிநாட்டு வளர்ந்தோர் (சார்க் நாடல்லாத) | 2500 |
| வெளிநாட்டு சிறியோர் (சார்க் நாடல்லாத) | 1250 |
| வெளிநாட்டு வளர்ந்தோர் (சார்க் நாடுகள்) | 700 |
| வெளிநாட்டு சிறியோர் (சார்க் நாடுகள்) | 350 |

### விளக்கம்

வளர்ந்தோர் - 12 வயதுக்கு மேற்பட்ட சிறியோரும் வளர்ந்தோரும்
சிறியோர் - 12 வயதுக் குறைந்தோர்

9-409

## 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க வணிகக் கப்பல் சட்டம்

2006 ஆம் ஆண்டின் I ஆம் இலக்க வணிகக் கப்பல்களை பதிவுசெய்யும் கட்டளையின் 5 ஆம் பிரிவின் கீழான II ஆம் அட்டவணைக்குப் புதிய கம்பனியொன்றை சேர்த்தமை பற்றிய அறிவித்தல்

2006.10.31 ஆந் திகதியிடப்பட்டதும் 1469/22 ஆம் இலக்கமுடைய துமான விசேட வர்த்தமானியில் உரியவகையில் பிரசுரிக்கப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வணிகக் கப்பல்களை பதிவு செய்யும் கட்டளையின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ஐக்கிய அமெரிக்க குடியரசின் மியாமி, புளோரிடாவில் தாபிக்கப்பட்டுள்ள இன்டர்நஷனல் ரெஜிஸ்டார் ஒவ் சிப்பிங் (IRS) கம்பனியை வகுப்பீட்டுக் கம்பனியொன்றாக 2013.09.01 ஆந் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வரத்தக்கதாக ஒரு (01) வருட தகுதிகூர் காலத்திற்கு உட்பட்டு, வணிகக் கப்பல் (பதிவு செய்தல்) கட்டளை யின் II ஆம் அட்டவணையில் உள்ளடக்கியமை பற்றி அறியத் தருகின்றேன். இதற்கமைவாக II ஆம் அட்டவணை பின்வருமாறாகும்.

ஏ. டபிள்யூ. செனவிரத்ன,
வணிகக் கப்பற்துறை பணிப்பாளர் அதிபதி.

### II ஆம் அட்டவணை

வகுப்பீட்டு சங்கங்களின் பட்டியல்

1. அமெரிக்கன் பியூரோ ஒவ் சிப்பிங்
2. பியூரோ வெரிட்டாஸ்
3. சைனா கிலசிபிக்சேசன் சொசையிற்றி
4. டெற் நோர்ஸ்க்கி வெரிட்டாஸ்
5. ஜேர்மனிஸ்சர் லொயிட்
6. கொறியன் ரெஜிஸ்டார் ஒவ் சிப்பிங்
7. லொயிட் ரெஜிஸ்டார்
8. நிபோன் காயிஜி கியொகாய்
9. ரெஜிஸ்ரோ இத்தாலியானோ நேவல்
10. ரஷ்யன் மரிடைம் ரெஜிஸ்டார் ஒவ் சிப்பிங்
11. இந்தியன் ரெஜிஸ்டார் ஒவ் சிப்பிங்
12. இன்டர்நஷனல் ரெஜிஸ்டார் ஒவ் சிப்பிங்

9-933

---

## காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 120) கீழான அறிவித்தல்

கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின்கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2013.09.20 ஆந் திகதி தொடக்கம் 2013.10.04 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு தெல்கந்தை காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக, பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு, எழுத்துமூலம் 2013.10.11 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
| --- | --- | --- |
| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் பழுதடைந்த அல்லது காணாமற் போயுள்ள ஏடுகளின் விபரங்கள் | காணியின் விபரங்கள் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள் |
| கொழும்பு மாவட்டத்தின் தெல்கந்தை காணிப் பதிவகத்தின் M என்னும் பிரிவின் 2861ஆம் காண்டத்தின் 54 ஆம் இலக்க ஏடு. | மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் பல்லே பற்று சல்பிட்டி கோறளையில் ஸ்ரீ ஜயவர்தன புர மாநகர சபை எல்லைக்குள் நாவல, இரண்டாவது ஒழுங்கையில் அமைந்துள்ள "தெல்கஹவத்த" என்னும் இடத்தின் இலக்கம் 01 உடைய காணித்துண்டிற்கு திரு. ஜே. ஏ. டபிள்யூ. காவல்ஹோா நில அளவீட்டாளரினால் 2005.02.15 ஆந் திகதி அளவிட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 5481 உடைய அளவீட்டின் பிரகாரம் எல்லைகள் :-<br><br>வடக்கு : என். சீ. டயஸ் இன் ஆதனம்;<br>கிழக்கு : ஆர். பர்னாந்துவின் ஆதனம்;<br>தெற்கு : லொட் 4, 2;<br>மேற்கு : பீ. டீ. பெரேராவின் ஆதனம்.<br><br>பரிமாணம் : 0ஏ. 0றூ. 2.50பே. | 1. திரு. ஏ. எம். ஏ. அத்தநாயக்க பி. நொ. ஆல் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 2005.05.17 ஆந் திகதிய 2288 ஆம் இலக்க நன்கொடை உறுதி. |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/29/2013/ஏடு. தயா
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

9-701

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(ராகம கிளை) - வை கே. புட்ஸ் மாக்கற்றிங் (பிறைவேட்) லிமிட்டெட்

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"வை கே. புட்ஸ் மாக்கற்றிங் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடு உடையதாகவும், செனீவரட்ன பிரியந்த நோட்டன் மறுபெயர் பிரியந்த நோட்டன் செனீவரட்ன அடகு வைத்தவர்களாகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் இத்துடனான அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்ட அடகு வைக்கப்பட்ட ஆதனம், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எல். ஏ. டி. குணதிலகவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, மார்ச் 29 ஆந் திகதியிடப்பட்ட 2311 ஆம் இலக்க முறி வை கே. புட்ஸ் மாக்கற்றிங் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட கடனைப் மீளப் பெறுவதற்காக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. ஸ்தாபனத்திற்கு பாதுகாப்பு அடமானமாக வழங்கப்பட்டது.

சொல்லப்பட்ட செனீவரட்ன பிரியந்த நோட்டன் மறுபெயர் பிரியந்த நோட்டன் செனீவரட்ன, முன் சொல்லப்பட்ட வை கே. புட்ஸ் மாக்கற்றிங் (பிறைவேட்) லிமிட்டெட்டின் காரியாம்சமான உரிமையாளர் என்பதுடன் அதனை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பவர் என்பதுடன், வை கே. புட்ஸ் மாக்கற்றிங் (பிறைவேட்) லிமிட்டெட்டின் கிட்டத்தட்ட சகல பங்குகளையும் கொண்டுள்ளதுடன் செனீவரட்ன பிரியந்த நோட்டன் மறுபெயர் பிரியந்த நோட்டன் செனீவரட்ன, அதன் இயக்குநராக செயல்படுவதுடன் சொல்லப்பட்ட வை கே. புட்ஸ் மாக்கற்றிங் (பிறைவேட்) லிமிட்டெட்டை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் என்பதுடன் அதனை நிர்வகிப்பவராகவும் செயல்படுவதுடன், சொல்லப்பட்ட செனீவரட்ன பிரியந்த நோட்டன் மறுபெயர் பிரியந்த நோட்டன் செனீவரட்ன, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. இனால் வை கே. புட்ஸ் மாக்கற்றிங் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட நிதிக் கடன் கொடுப்பனவின் மூலம் உண்மையிலேயே பயன் அடைபவர்.

அத்துடன், வை கே. புட்ஸ் மாக்கற்றிங் (பிறைவேட்) லிமிட்டெட்

மற்றும் செனீவரட்ன பிரியந்த நோட்டன் மறுபெயர் பிரியந்த நோட்டன் செனீவரட்னஆகியோர் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதுடன், 2013, மார்ச் 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ ஸ்தாபனத்திற்கு சொல்லப்பட்ட அறுபத்தொரு இலட்சத்து இரண்டாயிரத்து நூற்று தொண்ணூற்று எட்டு ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூ. 61,02,198.55) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், சொல்லப்பட்ட 2311 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப் பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 61,02,198.55 பணத்தொகையை 2013, ஏப்பிறல் 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின் (ஆனால் கொழும்பு பதிவு பிரிவிற்கு உட்பட்டது) உள்ள சியன்ன கோறளையின் அத்திக்காரி பற்றுவில் உள்ள பியகம பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட கலேதந்த மற்றும் கோணாவல கிராமங்களில் உள்ள ''பட்டலவத்த எஸ்டேட்'' என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிம் பெற்ற நிலஅளவையாளர் டி. சி. எம். எஸ். விமலரட்னவினால் தயாரிக்கப்பட்ட 1997, ஒற்றோபர் 16 ஆந் திகதியிடப்பட்ட 231/ 1997 ஆம் இலக்க வரைபடத்தில், விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு ஏ என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டி. ஜே. நாணயகாரவினால் தயாரிக்கப்பட்ட 1964, மே 19 ஆந் திகதியிடப்பட்ட 990 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 54 ; கிழக்கு : 990 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 86 (வீதி) ; தெற்கு : 990 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 92 (வீதி) ; மேற்கு : 990 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 71 இன் மிகுதியான பகுதி, அத்துடன், சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 231/ 1997 இற்கு அமைவான பதினைந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 15பே.) விஸ்தீரணம் கொண்ட ஆதனம்.

அத்துடன் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டி. ஜே. நாணயக்காரவினால் தயாரிக்கப்பட்ட 1964, மே 19 ஆந் திகதியிடப்பட்ட 990 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள வீதிக்கான ஒதுக்கீட்டின் உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரி. ரணவீர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

9-861/ 2

---

### ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(போகவந்தலாவ கிளை) - பரமசிவம் தவச்செல்வன் மற்றும் அண்டி சின்னசாமி பரமசிவம் மறுபெயர் சின்னசாமி பரமசிவம்

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

''பரமசிவம் தவச்செல்வன் மற்றும் அண்டி சின்னசாமி பரமசிவம் மறுபெயர் சின்னசாமி பரமசிவம் கடப்பாடு உடையவர்களாகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் கண்டி பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, மார்ச் 20 ஆந் திகதியிடப்பட்ட 2729 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2013, மே 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ ஸ்தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஐம்பத்துமூன்று இலட்சத்து இருபத்தையாயிரத்து நாநூற்று ஏழு ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 53,25,407.61) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 2729 ஆம் இலக்க முறி, மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 53,25,407.61 பணத்தொகையை 2013, யூன் 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி நிர்வாக மாவட்டம், மற்றும் கம்பளை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டதும், உடபுலத்கம பிரிவின் அம்பகமுவ கோறளவில் உள்ள பொகவந்தலாவையில் உள்ள 18 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் (முன்னர் 59 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டது) உரிமம் பெற்ற நிலஅளவையாளா எச். டி. சிமித்தினால் தயாரிக்கப்பட்ட 14.11.1954 ஆந் திகதியிடப்பட்ட 542 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 11கே என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 11L ; கிழக்கு : மயானம் ; தெற்கு : காணித்துண்டு 11J ; மேற்கு : எஸ்டேட் வீதி அத்துடன், கம்பளை காணி பதிவகத்தில் பி 845/ 141 தொகுதி/பக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மூன்று தசம் பூச்சியம் ஒன்பது பேர்ச்சுகள்

(0ஏ. 0றூ. 3.09பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனத்துடனான கட்டடம் மற்றும் அத்துடனான எல்லாம்.

முன் சொல்லப்பட்ட காணி அண்மையில் நில அளவை செய்யப்பட்டதன் விபரங்கள் பின்வருமாறு :

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், தற்போது நுவரெலியா மாவட்டம் மற்றும் கம்பளை மாவட்ட பதிவைக் கொண்ட அம்பகமுவ கோறளவின் அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அம்பகமுவ பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பொகவந்தலாவ நகரத்தின் பன்சல வீதியின் 18 ஆம் வரிமதீப்பீட்டின் கீழ் பொகவந்தலாவ நகரத்தில் உள்ள ஆதனம், உரிமம் பெற்ற நிலஅளவையாளா டி. எல். டி. வை. விஜயவர்தனவினால் தயாரிக்கப்பட்ட 07.02.2012 ஆந் திகதியிடப்பட்ட 14350 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 01 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : பன்சல வீதி மற்றும் பன்சல வீதியின் 20 ஆம் வரிமதிப்பீட்டிலக்க ஆதனம் ; கிழக்கு : பிரதேச சபை, பன்சல வீதி 20 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள வளவுகள் மற்றும் பன்சல வீதியின் 16 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள வளவுகள் ; தெற்கு : பன்சல வீதியின் 16 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள ஆதனம் ; மேற்கு : பன்சல வீதியின் 16 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள வளவு மற்றும் பன்சல வீதி அத்துடன், மூன்று தசம் பூச்சியம் நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 3.04பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனத்துடனான கட்டடம் மற்றும் அத்துடனான எல்லாம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரி. ரணவீர,
உ.பொ.மு (சட்டம்) / சபைச் செயலாளர்.

9-861/ 1

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(அலுத்கம கிளை) - சின்ஹரா ஜகத் நிலாந்த சில்வா மற்றும் அந்தோனித்துர மஞ்சுல நிஷாந்தி சில்வா

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"சின்ஹரா ஜகத் நிலாந்த சில்வா மற்றும் அந்தோனித்துர மஞ்சுல நிஷாந்தி சில்வா கடப்பாடு உடையவர்களாக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு பீ. வி. என். டபிள்யூ. பெரேராவினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2012, மே 25 ஆந் திகதியிடப்பட்ட 3921 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2013, மே 08 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ ஸ்தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது எழுபத்துமூன்று இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து ஐநூற்று எண்பது ரூபா எண்பது சதம் (ரூ. 73,92,580.80) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 3921 ஆம் இலக்க முறி, மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 73,92,580.80 பணத்தொகையை 2013, மே 09 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் டி. கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

1. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் உள்ள களுத்துறை தொட்டமுன தெற்கின் அளுத்கம படவின் பேருவளை பிரதேச சபையின் மாலேவன் பத்த உப அலுவலக எல்லைக்கு உட்பட்ட களுவாமோதரவில் உள்ள கலவில வத்தை என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜி. எல். டபிள்யூ, பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 1989, நவெம்பர் 10 ஆந் திகதியிடப்பட்ட 914 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 9ஏ என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : டபிள்யூ. எம். மெண்டிஸ் டிஸ்ரிலரியின் ஆதனம் மற்றும் காணித்துண்டு 9பி ; கிழக்கு : காணித்துண்டு 9 பி மற்றும் வீதி ; தெற்கு : வீதி மற்றும் அதே காணியின் காணிததுண்டுகள் 1 மற்றும் 2 ; மேற்கு : அதே காணியின் காணித்துண்டுகள் 1 மற்றும் 2 அத்துடன் டபிள்யூ. எம். மென்டிஸ் டிஸ்ரிலரியின் வளவு. அத்துடன் சொல்லப்பட்ட 914 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், களுத்துறை காணிப் பதிவகத்தில் எச். 244/70 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட, இருபது பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனம்.

2. மேல் மாகாணம் களுத்துறை மாவட்டத்தில் உள்ள களுத்துறை தொட்டமுன தெற்கின் அளுத்கம படவின் பேருவளை பிரதேச சபையின் மாலேவன் பெட உப அலுவலக எல்லைக்கு உட்பட்ட களுவாமோதரவில் உள்ள கலவில வத்தை என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜி. எல். டபிள்யூ, பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 1999, நவெம்பர் 10 ஆந் திகதியிடப்பட்ட 914 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 9பி என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : டபிள்யூ. எம். மெண்டிஸ் டிஸ்ரிலரியின் வளவுகள் ; கிழக்கு : களுவாமோதர நதி ; தெற்கு : அதே காணியின் காணித்துண்டு 11; மேற்கு : வீதி மற்றும் சொல்லப்பட்ட 914 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 9ஏ, அத்துடன் சொல்லப்பட்ட 914 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், களுத்துறை காணி பதிவகத்தில்

எச். 258/287 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட இருபது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனம்.

உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜி. எல். டபிள்யூ. பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 1989, திசெம்பர் 11 ஆந் திகதியிடப்பட்ட 914 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள 15 அடி அகலமான பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரி. ரணவீர,
உ.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

9-861/4

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(அளுத்கம கிளை) - லொக்குகன்கானம்கே ஜனித்தா ரங்கஜீவ பீரிஸ்

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

" லொக்குகன்கானம்கே ஜனித்தா ரங்கஜீவ பீரிஸ் கடப்பாடு உடையவர்களாக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் கண்டி பிரசித்த நொத்தாரிசு பீ. வீ. டபிள்யூ. பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, ஏப்பிறல் 25 ஆந் திகதியிடப்பட்ட 1290 ஆம் இலக்க முறி, 2006, ஒகத்து 17 ஆந் திகதியிடப்பட்ட 1666 ஆம் இலக்க முறி. 2010, செத்தெம்பர் 09 ஆந் திகதியிடப்பட்ட 3179 ஆம் இலக்க, முறி மற்றும் 2011, ஒற்றோபர் 25 ஆந் திகதியிடப்பட்ட 3655 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2013, மே 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ ஸ்தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது எழுபத்துமூன்று இலட்சத்து முப்பத்தோராயிரத்து எண்பத்தாறு ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூ. 73,31,086.52) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 1290, 1666, 3179 மற்றும் 3655 ஆம் இலக்க முறிகள், மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 73,31,086.52 பணத்தொகையை 2013, யூன் 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் டி. கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம் களுத்துறை மாவட்டம், களுத்துறை தொட்டமுன தெற்கின் அளுத்கம படவின் பேருவளை பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அளுத்கம உப அலுவலகத்திற்கு உட்பட்ட கணேகமவில் உள்ள வெல்லபொடவத்தவின் பகுதி என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜி. எல். டபிள்யூ. பெரேரராவினால் தயாரிக்கப்பட்ட 2000, ஒற்றோபர் 7 ஆந் திகதியிடப்பட்ட 1896 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு ஏ1 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : டபிள்யூ. சாலட் பர்ணான்டோ மற்றும் ஏனையவர்களினால் உரிமை கோரப்படும் அதே காணியின் பகுதி ; கிழக்கு : கங்க பொட வீதி ; தெற்கு : காணித்துண்டு ஏ2 ; மேற்கு : பெந்தோட்ட ஆறு, மற்றும், அத்துடன் சொல்லப்பட்ட 1896 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், களுத்துறை காணி காணிப் பதிவகத்தில் எச். 231/233 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட பன்னிரண்டு தசம் பூச்சியம் ஒன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 12.01பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரி. ரணவீர,
உ.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

9-861/3

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(திஸ்ஸமஹாராம கிளை) - ஊறாப்பொல முதலிகே நிஹால்

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

" ஊறாப்பொல முதலிகே நிஹால் கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் அம்பலாந்தோட்டை பிரசித்த நொத்தாரிசு எச். ஏ. அமரசேனவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, நவெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட 13186 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2013, மார்ச் 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ ஸ்தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஐம்பத்துமூன்று இலட்சத்து பதின்மூவாயிரத்து இருநூற்று எழுபத்தேழு ரூபா

இருபத்திரண்டு சதம் (ரூ. 53,13,277.22) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 13186 ஆம் இலக்க முறி, மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 53,13,277.22 பணத்தொகையை 2013, ஏப்பிறல் 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின், மகம் பற்றுவில் உள்ள திஸ்ஸமஹாராமவின் கசின்கமவில் உள்ள பங்களாவத்தை மறுபெயர் பாருவதி அம்மா படிஞ்சிவத்தை மறுபெயர் பகேகனுவத்த கெபல்ல (காணியின் ஊடாக செல்லும் நீர்ப்பாசன கால்வாய்) என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. ஜயாத்துரையினால் தயாரிக்கப்பட்ட 1963.09.28 ஆந் திகதியிடப்பட்ட 502 ஆம் இலக்க வரைபடத்தில் (எடுத்தல் இலக்கம் 11) விபரமாக விளக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு : எம். எஸ். தம்பிராஜா மற்றும் ஏனையவர்களுக்கு சொந்தமான ஆதனம்; மேற்கு : பெருந்தெரு மற்றும் எம். எஸ். தம்பிராஜா மற்றும் ஏனையவர்களுக்கு சொந்தமான ஆதனம், அத்துடன் ஹம்பாந்தோட்டை காணிப் பதிவகத்தில் ஏ 1 199/1998 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட இரண்டு றூட்ஸ் (0ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனத்துடனான கட்டடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நில அளவைக்கு அமைய மேற்குறிப்பிட்டுள்ள காணியின் விபரங்கள் பின்வருமாறு :

தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின், மகம் பற்றுவில் உள்ள திஸ்ஸமஹாராமவின் கசின்கமவில் உள்ள பங்களாவத்தை மறுபெயர் பாருவதி அம்மா படிஞ்சிவத்தை என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். ஏ. பாலித்தவினால் தயாரிக்கப்பட்ட 29.04.2012 ஆந் திகதியிடப்பட்ட Ha/80 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு ஏ என விபரமாக விளக்கப்பட்டுள்ள அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு : எம். எஸ். தம்பிராஜா மற்றும் ஏனையவர்களுக்கு சொந்தமான ஆதனம்; மேற்கு : பிரதான வீதி மற்றும் எம். எஸ். தம்பிராஜா மற்றும் ஏனையவர்களினால் உரிமை கோரப்படும் காணி அத்துடன் இரண்டு றூட் (0ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனத்துடனான கட்டடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரி. ரணவீர,
உ.பொ.மு (சட்டம்) / சபைச் செயலாளர்.

9-861/5

### ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(வத்தளை கிளை) - பிரபோத கேஷன சுமனசேகர

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"பிரபோத கேஷன சுமனசேகர கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். பாயிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009, மே 25 ஆந் திகதியிடப்பட்ட 627 ஆம் இலக்க முறி, மற்றும் கொழும்பு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். பீ. எம். மொஹோட்டியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010, ஒற்றோபர் 28 ஆந் திகதியிடப்பட்ட 4452 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2013, யூன் 04 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ ஸ்தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது நான்கு கோடியே நாற்பத்தொன்பது இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து அறுநூற்று முப்பத்திரண்டு ரூபா எழுபது சதம் (ரூ. 4,49,44,632.70) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 627 மற்றும் 4452 ஆம் இலக்க முறிகள், மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 4,49,44,632.70 பணத்தொகையை 2013, யூன் 05 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் டீ. கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மற்றும் மாநகர சபையின் பிரிவு 37 இன் கொள்ளுப்பிட்டியவில் உள்ள ஆனந்த குமாரசாமி மாவத்தையின் 68 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட (பகுதி) "புரூஸ் ஹில்" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். எச். சுபசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 2007, நவெம்பர் 1 ஆந் திகதியிடப்பட்ட 2507 ஆம் இலக்க இறுதி பிரிப்பு வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1ஏ என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 1B; கிழக்கு : ஆனந்த குமாரசாமி மாவத்தையின் 70 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள ஆதனம்; தெற்கு : ஆனந்த குமாரசாமி மாவத்தையின்

68/4 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள ஆதனம்; மேற்கு : தனியார் வீதி அத்துடன் சொல்லப்பட்ட 2507 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவான இருபது தசம் நான்கு பூஜ்யம் பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 20.40பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனம்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நில அளவைக்கு அமைய மேற்குறிப்பிட்டுள்ள காணியின் விபரங்கள் பின்வருமாறு :

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மற்றும் மாநகர சபையின் பிரிவு 37 இன் கொள்ளுப்பிட்டியவில் உள்ள ஆனந்த குமாரசாமி மாவத்தையின் 68 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட (பகுதி) "புரூஸ் ஹில்" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். எச். சுபசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 2009, ஏப்பிறல் 29 ஆந் திகதியிடப்பட்ட 2657 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 2; கிழக்கு : ஆனந்த குமாரசாமி மாவத்தையின் 70 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள ஆதனம்; தெற்கு : ஆனந்த குமாரசாமி மாவத்தையின் 68/4 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள ஆதனம்; மேற்கு : தனியார் வீதி அத்துடன் சொல்லப்பட்ட 2657 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவான இருபது தசம் நான்கு பூஜ்யம் பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 20.40பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனம்.

உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். எச். சுபசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 2007, நவெம்பர் 1 ஆந் திகதியிடப்பட்ட 2507 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட காணித்துண்டு 1ஏ இன் மேற்கு எல்லையினில் கிறீன் பாத் (தற்போது ஆனந்த குமாரசுவாமி மாவத்தை) இல் இருந்து செல்லும் 20 அடி அகலாமன பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரி. ரணவீர,
உ.பொ.மு (சட்டம்) / சபைச் செயலாளர்.

9-861/6

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம்

### 394 (3) ஆம் பிரிவின் கீழான "ஹீறோ என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2004.10.04 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட 'ஹீறோ என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

அவ்வாறு கலைக்கப்படாமல் இருப்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "ஹீறோ என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலுள்ள பதிவேட்டிலி ருந்து நீக்கப்பட்டு கம்பனி கலைக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி (பணிகளை மேற் கொள்ளல்) தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிரிவர்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

தூவலகே நிஹால் ரஞ்ஜன் சிரிவர்தன,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி,
(பணிகளை மேற்கொள்ளல்).

பீவீ 20296
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2013, ஓகத்து 30.

9-923

---

## இ. அ. நி. கூ. வங்கி

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2013, யூலை 31 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கல்கிஸ்ஸை, காலி வீதி, 194 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள 'நிஹால் ட்ரேடிங் கம்பனி' என்ற பெயர் மகுடத்தின கீழும் குழுமத்தின் கீழும் பங்காண்மையில் தொழில் கொண்டு நடாத்தின்ற கொழும்ப 05, முஹாந்திரம் தாபரே மாவத்தை, 32 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த முத்துதந்திரிகே நிஹால் சரத் பெரேரா மற்றும் அருந்ததி ஸ்ரீதேவி ஜயகொடி பெரேரா மறுபெயர் அருந்ததி சீதேவி பெரேரா திருமணத்துக்கு முன்னர் ஜயகொடி என்போர், எல்லாம் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ.அ.நி.கூ. வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். குணரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004 நவெம்பர் 2 ஆந் திகதிய 1513 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். குணரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, மே 21 ஆந் திகதிய 1437 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். குணரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, மாச்சு 12 ஆந் திகதிய 1407 ஆம் இலக்க ஈட்டுமுறி மீது, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு லஷித எஸ். ஜயசிங்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002, திசெம்பர் 16 ஆந் திகதிய 122 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு லஷித எஸ். ஜயசிங்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002, திசெம்பர் 16 ஆந் திகதிய 121 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். குணரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002, சனவரி 09 ஆந் திகதிய 1281 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த

நொத்தாரிசு எஸ். எம். குணரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002, சனவரி 09 ஆந் திகதிய 1280 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். குணரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001, சனவரி 11 ஆந் திகதிய 1186 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். குணரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000, மாச்சு 07 ஆந் திகதிய 1062 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளதாதலாலும்,

முத்துதந்திரிகே நிஹால் சரத் பெரேரா மற்றும் அருந்ததி ஸ்ரீதேவி ஜயகொடி பெரேரா மறுபெயர் அபிவிருத்தி சீதேவி பெரேரா திருமணத்துக்கு முன்னர் ஜயகொடி என்போரினால் செய்யப்பட்ட கொடுப்பனவையடுத்து, இ.அ.நி.கூ. வங்கி, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். லியனகே என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, நவெம்பர் 23 ஆந் திகதிய 107 ஆம் இலக்க விடுவிப்புறுதி மூலம், இதற்கான இரண்டாம் அட்டவணையின் பாகம் I இல் விபரிக்கப்பட்ட சொல்லப்பட்ட ஆதனத்திலிருந்து, இதற்கான நான்காம், ஐந்தாம் அட்டவணைகளில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்ட இருபாகங்களை விடுவித்துள்ளதாதலாலும்,

2013, யூன் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக நான்கு கோடியே முப்பத்தொரு இலட்சத்து எழுபத்துநான்காயிரத்து எண்ணூற்று நான்கு ரூபா இருபத்தொன்பது சதம் (ரூ. 4,31,74,804.29) கொண்ட தொகையும், 2013, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை பத்தொன்பது இலட்சத்து பதினாறாயிரத்து அறுநூற்று ஐம்பது ரூபா (ரூ. 19,16,650) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொருதடவை மீளாயப்பட வேண்டிய சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7.0%) வட்டியும், நாற்பது இலட்சம் ரூபா (ரூ. 40,00,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்பட வேண்டிய சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டு தசம் ஐந்து சதவீத (8.5%) வட்டியும் சொல்லப்பட்ட முத்துதந்திரிகே நிஹால் சரத் பெரேரா மற்றும் அருந்ததி ஸ்ரீதேவி ஜயகொடி பெரேரா மறுபெயர் அருந்ததி சீதேவி பெரேரா திருமணத்துக்கு முன்னர் ஜயகொடி என்போரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேர்மதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப் படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப் பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 1513, 1437, 1407, 122, 121, 1281, 1280, 1186 மற்றும் 1062 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பொருத்தனை களுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, (இதற்கான நான்காம் ஐந்தாம் அட்டவணைகளில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்ட காணிப் பாகங்கள் தவிர) கீழே விபரிக்கப்படும் காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து நான்கு கோடியே முப்பத்தொரு இலட்சத்து எழுபத்துநான்காயிரத்து எண்ணூற்று நான்கு ரூபா இருபத்தொன்பது சதம் (ரூ. 4,31,74,804.29) கொண்ட தொகையையும், 2013, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை பத்தொன்பது இலட்சத்து பதினாறாயிரத்து அறுநூற்று ஐம்பது ரூபா (ரூ. 19,16,650) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்று மாதங்களுக்கொருதடவை மீளாயப்பட வேண்டிய சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7.0%) வட்டியும், நாற்பது இலட்சம் ரூபா (ரூ. 40,00,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாய்வு செய்யப்படவேண்டிய சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டு தசம் ஐந்து சதவீத (8.5%) வட்டியையும், சொல்லப்பட்ட வீதம் ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மூன்றுமாதங்களுக்கொருதடவை மீளாயப்படுதல் வேண்டும். அத்துடன் எண்பத்தைந்து இலட்சம் (ரூ. 85,00,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றக்கு இருபத்து நான்கு சதவீத (24%) வட்டியையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினையும் அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட 122, 1062, 1281 மற்றும் 1186 ஆம் இலக்க ஈடுமுறிகள் மூலம் அருந்ததி ஸ்ரீதேவி ஜயகொடி பெரேரா மறுபெயர் அருந்ததி சீதேவி பெரேரா திருமணத்துக்கு முன்னர் ஜயகொடி என்பவரினால் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட இதற்கான நான்காம், ஐந்தாம் அட்டவணைகளில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்ட காணிப்பாகங்கள் தவிர கீழே விபரிக்கப்படும் காணியும் வளவுகளும் அதன் மீதுள்ள வேறெல்லாமும், மற்றும் மேற்கூறப்பட்ட 121, 1280 ஆம் இலக்க ஈடுமுறிகள் மூலம் முத்துதந்திரிகே நிஹால் சரத் பெரேரா என்பவரினால் இ.அ.நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் காணியும் வளவுகளும் அதன் மீதுள்ள வேறு எல்லாமும் மற்றும் மேற்கூறப்பட்ட 1407, 1437, 1513 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் முத்துதந்திரிகே நிஹால் சரத் பெரேரா மற்றும் அருந்ததி ஸ்ரீதேவி ஜயகொடி பெரேரா மறுபெயர் அருந்ததி சீதேவி பெரேரா திருமணத்துக்கு முன்னர் ஜயகொடி என்போரினால் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட இதற்கான நான்காம், ஐந்தாம் அட்டவணைகளில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்ட காணிப்பாகங்கள் தவிர கீழே விபரிக்கப்படும் காணியும் வளவுகளும் அதன் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டு மென இத்தால் தீர்மானிக்கின்றது."

### முதலாம் அட்டவணை

### 1407, 1437, 1513, 121, 1280 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிட்டிக் கோறளையின் பள்ளே பத்துவில் கொழும்பு மாநகர சபை

எல்லைகளினுள் நாரஹென்பிட்டியில் அமைந்துள்ளதும், முஹந்திரம் தாபரே மாவத்தை, 32 ஆம், 32/1 ஆம் வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்டதாக அதன் மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் துடுவேவத்த மறுபெயர் மஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்கிரமசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1984, மார்ச் 28 ஆந் திகதிய H/ 1291 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப் பட்டதும், காணித்துண்டம் 3 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப் பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 3 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : முஹாந்திரம் தாபரே மாவத்தை; கிழக்கில் : அதே காணியின் காணித்துண்டம் 2 ; தெற்கில் : அதே காணியின் காணித்துண்டம் 1 மற்றும் ; மேற்கில் : காணித்துண்டம் 4 (வீதிக்கான ஒதுக்கிடம்) ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட H/ 1291 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஆறு தசம் எட்டு பேர்ச்சு (0ஏ. 0றூ. 6.8பே.) கொண்டுள்ளதுடன், கல்கிஸ்ஸை காணிப் பதிவகத்தில் M 1557/84 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

கீழே விபரிக்கப்படும் வீதி ஒதுக்கிடத்தில், அதன் மீது மற்றும் அதுநெடுகிலுமான செல்வழியுரிமையுடன் சேர்த்து :-

மேற்கூறப்பட்ட நாரஹென்பிட்டியில் அமைந்துள்ளதும், துடுவே வத்த மறுபெயர் மஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் மேற்கூறப்பட்ட H/ 1291 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக் காட்டப்பட்டதும், காணித்துண்டம் 4 என அடையாளமிடப்பட்டதும், (12 அடி அகலம்), பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டத்தின் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : முஹாந்திரம் தாபரே மாவத்தை; கிழக்கில் : அதே காணியின் காணித்துண்டம் 3 ; தெற்கில் : அதே காணியின் காணித்துண்டம் 1 மற்றும் ; மேற்கில் : றோட்டரிக் களரியின் ஆதனம்; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட H/ 1291 ஆம் இலக்க வரைபடத்தின்படி இரண்டு தசம் எட்டு பேர்ச்சு (0ஏ. 0றூ. 2.8பே.) கொண்டுள்ளதுடன், கல்கிஸ்ஸை காணிப் பதிவகத்தில் M 1557/85 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

### இரண்டாம் அட்டவணை

### 1407, 1437, 1513, 122, 1062, 1281, 1186 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

பாகம் I

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள திவுலப்பிட்டி பதிவு அலுவலர் பிரிவின் யட்டிகஹாப் பத்துவவின் சிறிய பிரிவிலும் நீர்கொழும்புப் பதிவு மாவட்டத்திலும் கொட்டதெனியாவக் கிராமத்தில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும், பயிர்களுடனும் கலிம்புர எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. விதாரண என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1995, மார்ச்சு 9 ஆந் திகதிய 2345 ஆம் இலக்க வரைபடத்திற் காணித்துண்டம் 1A2 என அடையாளமிடப்பட்டதுமான காணித் துண்டு ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1A2 பின்வரும் எல்லை களையுடையது - வடக்கில் : எல, சிறிசேன மற்றும் ஏனையோருக்குச் சொந்தமான பொடிகந்த மற்றும் சொல்லப்பட்ட 2345 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1A3 ; கிழக்கில் : குவென்டலின் ஜயகொடிக்குச் சொந்தமான 20 ஏக்கர்கள் ; தெற்கில் : குவென்டலின் ஜயகொடிக்குச் சொந்தமான 20 ஏக்கர்கள் மற்றும் முன்னர் காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமானதும் இப்போது திருமதி ஏ. எஸ். பெரேராவிற்குச் சொந்தமானதுமான கலிம்புரேவத்த மற்றும் ; மேற்கில் : ஆர். டபிள்யூ. திகேனிஸ் மற்றும் ஏனையோருக்குச் சொந்தமான பொடிகந்த; பரப்பளவில் இது, மேற்கூறப்பட்ட 2345 ஆம் இலக்க வரைபடத்தில் 1B1, 1A1 என அடையாளமிடப்பட்டதும், பரப்பளவில் முறையே ஒரு றூட் பன்னிரண்டு தசம் ஐந்து ஒன்பது பேர்ச்சையும் (0ஏ. 1றூ. 12.59பே.) பதினாறு தசம் ஏழு ஆறு பேர்ச்சையும் (0ஏ. 0றூ. 16.76பே.), கொண்டுள்ளதுமான காணித்துண்டின் மீதான செல்வழியுரிமையுடன் இருபது ஏக்கர் மூன்று றூட் இருபத்திமூன்று தசம் ஐந்து நான்கு பேர்ச்சுக்கள் (20ஏ. 3றூ. 23.54பே.) கொண்டுள்ளதுடன், நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் உரித்து D 263/241 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

பாகம் II

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள திவுலப்பிட்டி பதிவு அலுவலர் பிரிவின் யட்டிகஹாப் பத்துவவின் சிறிய பிரிவிலும் நீர்கொழும்புப் பதிவு மாவட்டத்திலும் கொட்டதெனியாவக் கிராமத்தில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும், பயிர்களுடனும் கலிம்புர எனவழைக்கப்படும் காணியினதாய் 2345 ஆம் இலக்க வரைபடத்திற் காணித்துண்டம் 1B2 என அடையாளமிடப்பட்டதுமான காணித்துண்டு ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1B2 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : றோஹினி சூரியாராச்சிக்குச் சொந்தமான கலிம்புரெவத்தவும் எஸ். ஜே. வல்பிட்ட அன்ட் கம்பனிக்குச் சொந்தமான திசாநாயக்கவத்தவும்; கிழக்கில் : அரசுக்குச் சொந்தமான தியகம்பொல கொலனி; தெற்கில் : சொல்லப்பட்ட 2345 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1B3 மற்றும் ; மேற்கில் : சொல்லப்பட்ட 2345 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 B1; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 2345 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1B1 என விபரிக்கப்பட்டதும், பரப்பளவில் ஒரு றூட் பன்னிரண்டு தசம் ஐந்து ஒன்பது பேர்ச்சை (0ஏ. 1றூ. 12.59பே.), கொண்டுள்ளதுமான காணியின் மீதான செல்வழியுரிமையுடன் ஆறு ஏக்கர் ஒரு றூட் இருபத்து நான்கு தசம் ஆறு நான்கு பேர்ச்சு (6ஏ. 1றூ. 24.64பே.) கொண்டுள்ளதுடன், நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் D 228/382 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

### மூன்றாம் அட்டவணை

### 1407, 1437, 1513, 122, 1281 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவினுள் கம்பஹா மாவட்டத்திலுள்ள ஹாபிடிகம கோறளையின் யட்டிகஹா பத்துவில் கலிம்புரவில் கலிம்புரத் தோட்டம் என வழைக்கப்படும் காணியினதாய் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. விதாரண என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1993, செத்தெம்பர் 5 ஆந் திகதிய 1770 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்க லும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2 பின்வரும் எல்லைகளை யுடையது- வடக்கு : காணித்துண்டம் 1 மற்றும் குவென்டலின் ஜயக்கொடியினால் உரிமைகோரப்பட்ட அக்கர விஸ்ஸ மறுபெயர் மஹாகந்த எனவழைக்கப்படும் காணி ; கிழக்கு : குவென்டலின் ஜயகொடியினால் உரிமைகோரப்பட்ட அக்கர விஸ்ஸ மறுபெயர் மஹாகந்த எனவழைக்கப்படும் காணி, அரசாங்கத்துக்குச் சொந்தமான மஹாகந்த மற்றும் பிரதேச சபை வீதி; தெற்கு : பிரதே சபை வீதி மற்றும் ; மேற்கு : லொலுவாகொட ஜயவர்த்தன வெதமஹத்தயாவின் மரபுரிமையாளர்களினால் உரிமைகோரப்பட்ட கனேகந்த மற்றும் சூட்டி மஹத்தயாவினால் உரிமைகோரப்பட்ட காணி; பரப்பளவில் இது, 1770 ஆம் இலக்க வரைபடத்தின்படி பன்னிரண்டு ஏக்கர் இரண்டு றூட் பத்தொன்பது தசம் ஒன்பது பேர்ச்சை (12ஏ. 2றூ. 19.9பே.),

கொண்டுள்ளதுடன், நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் D 269/133 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

**நான்காம் அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்திலுள்ள ஹாபிடிகம கோறளையின் யட்டிகஹா பத்துவில் மீரிகம பிரதேச சபை எல்லைகளினுள் கலிம்புரக் கிராமத்தில் அமைந்துள்ள கலிம்புர மறுபெயர் கலிம்புரேவத்த எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணியினதாய் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஐ. கொட்டம்பகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2006, ஏப்பிறல் 8 ஆந்திகதிய 8087 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித் துண்டம் இல. 1 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப் பட்ட காணித்துண்டம் 1 சொல்லப்பட்ட வரைபடத்தின்படி பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : 1770 ஆம் இலக்க வரைபடத்தில் அதே காணித்துண்டம் 1 இன் எஞ்சியுள்ள பாகம்; கிழக்கில் : 1770 ஆம் இலக்க வரைபடத்தில் அதே காணித்துண்டம் 1 இன் எஞ்சியுள்ள பாகம் ; தெற்கில் : 1770 ஆம் இலக்க வரைபத்தில் அதே காணித்துண்டம் 1 இன் எஞ்சியுள்ள பாகம் மற்றும் ; மேற்கில் : வீதி (பி. ச.) ; பரப்பளவில் இது, அதன் மீதுள்ளதும் அதனோடிணைந் துள்ளதுமான வேறெல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட 8087 ஆம் இலக்க வரைபடத்தின்படி இரண்டு ஏக்கர் இரண்டு றூட்டை (02ஏ. 2றூ. 0பே.) கொண்டுள்ளது.

**ஐந்தாம் அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்திலுள்ள ஹாபிடிகம் கோறளையின் யட்டிகஹா பத்துவில் நீர்கொழும்புக் காணிப் பதிவகப் பதிவுப் பிரிவினுள் திவுலபிட்டி பிரதேச செயலாளர் பிரிவினுள் கொட்டதெனியாவக் கிராமத்தில் அமைந்துள்ளதும், கலிம்புரேவத்த எனவழைக்கப்படும் அறியப்படுவதுமான காணியினதாய் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. விதாரண என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007, யூன் 27 ஆந் திகதிய 5485 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டதும், 2007, நவெம்பர் 14 ஆந் திகதியன்று புறக்குறிப் பிடப்பட்டதும், காணித்துண்டம் இல. 1 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 சொல்லப்பட்ட வரைபடத்தின்படி பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : அதே காணியினதாய் ஜீ. ஆர். எஸ். ஜயலத்தினால் உரிமைகோரப்பட்ட காணியும் இக்காணியின் எஞ்சியுள்ள பாகமும் ; கிழக்கில் இக்காணியின் எஞ்சியுள்ள பாகம் ; தெற்கில் : இக்காணியின் எஞ்சியுள்ள பாகமும் வீதியும் மற்றும் ; மேற்கில் : வீதியும் அதே காணியினதாய் ஜீ. ஆர். எஸ். ஜயலத்தினால் உரிமைகோரப்பட்ட காணியும் ; பரப்பளவில் இது, அதன்மீதுள்ளதும் அதனோடிணைந் துள்ளதுமான வேறெல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட 5485 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஐந்து ஏக்கர் ஐந்து தசம் எட்டு பூச்சியம் பேர்ச்சு (5ஏ. 0றூ. 5.80பே.) கொண்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி. கூ. வங்கி,
இல. 73/5 , காலி வீதி,
கொழும்பு 3.

9-567

---

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் (PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம் : 910236 - குமாரவடு திலக் புஸ்பகுமார

28.06.2013 ஆந் திகதியன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டமொன்றில் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி பணிப் பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றிய தீர்மானமாவது :-

"கடன் எடுத்த குமாரவடு திலக் புஸ்பகுமார என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்சமயம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஐ. என். விஜேசேகர 13.12.2007 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 4014 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், மேற்படி முறிகள் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 30.04.2013 ஆந் திகதி வரை ரூபா 54,38,028.67 செலுத்த வேண்டியுள்ளதாலும், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் படி மேற்படி முறி இலக்கங்கள் 3086 மற்றும் 4014 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 54,38,028.67 பணத்தொகையுடனும் 01.05.2013 ஆந் திகதி முதல் ஏலத் திகதி வரை ரூபா 48,03,519.70 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு 16% வட்டியுடனும் விளம்பரச் செலவுகள், வேறு கொடுப்பனவுகள் சேர்த்து (பணம் செலுத்தியிருப்பின் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதி, இலக்கம் 182, 3 ஆவது மாடியில் ஏலதாரர்களான திரிவின்கா சேனநாயக்க மற்றும் திரு. எல். பி. சேனநாயக்க மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

**அட்டவணை**

தென் மாகாணம், காலி மாவட்டம், பல்லே நான்கு கிரவட் எல்லையில் போப்ப பொடல்ல பிரதேச சபை எல்லையில் உளுவிட்டிக்க கிராமத்தில் அமைந்துள்ள (நிலஅளவையாளர் டி. ஜே. அரம்பவெல 13.05.1984 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 106 இல் காண்பிக்கப் பட்ட பொக்கரமுலவவத்த காணியின் லொட் 2) காணியின் பகுதிபடுத் திய காணித்துண்டான நிலஅளவையாளர் ஜி. எச். ஜி. ஏ. ஏ. டி. சில்வா 12.06.1991 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 1505 இல் காண்பிக்கப்பட்ட லொட் 6 காணியின் எல்லைகள் - வடக்கு : இக் காணியின் மிகுதித் துண்டு ; கிழக்கு : லொட் 7 (பாதை) ; தெற்கு : இக் காணியின் லொட் 5 ; மேற்கு : இக் காணியின் மிகுதிப் பகுதி. இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 12பே. மேற்படி வரைபட இலக்கம் 1505 படி இக் காணி காலி பதிவகத்தில் A 493/277 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது மற்றும் A 493/70 மற்றும் A444/32 தொடர்பு கொண்டு விசாரணைகளை மேற்கொள்ள முடியும் அத்துடன் ; இங்கு கீழ் குறிப்பிட்டுள்ள காணியூடாக எவ்வித தடையுமின்றி போக்குவரத்து செய்யவும் மற்றும் மின்சார தொடர்பு மற்றும் தண்ணீர் குழாய்கள் மற்றும் மேலாகவும் கீழாகவும் தேவையான வசதிகளுக்காக தொடர்பு இணைப்புகள் செய்யவும்

சுதந்திரமாக சென்று வர மேற்படி உளுவிட்டிகம கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவை யாளர் டி. ஜே. அரம்பவெல 13.05.1984 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 106 இல் காண்பிக்கப்பட்ட பொக்கரமுல்லவத்த காணியின் லொட் 2) காணியின் பகுதிபடுத்திய நிலஅளவையாளர் ஜி. எச். ஜி. ஏ. ஏ. டி. சில்வா 12.06.1991 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 1505 இல் காண்பிக்கப்பட்ட லொட் 7 காணியின் எல்லைகள் - வடக்கு : இக் காணியின் மிகுதிப் பகுதி ; கிழக்கு : தற்சமயம் உள்ள ரோட் ; தெற்கு : இக் காணியின் மிகுதிப் பகுதி ; மேற்கு : லொட் 1, 2, 3, 4, 5 மற்றும் 6. இக் காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 9.00பே. மேற்படி வரைபட இலக்கம் 1505. இக் காணி காலி காணிப் பதிவகத்தில் A 559/154 இல் மற்றும் A 444/291 மற்றும் A444/32 தொடர்பு கொண்டு பதிவு செய்யப்பட் டுள்ளது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

9-919

---

## இலங்கை வங்கி

### 1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2013.08.13 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்த தாவது-

1. பிரசித்த நொத்தாரிசு திரு. பி. பி. ரணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2011.10.17 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 6547 மற்றும் 2011.12.22 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 6693 ஆகியவற்றின் பேரில் இல. 02, 2/1, லக்ஷ்மி கார்டன்ஸ், பொரளை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ஏ. சீ. ஈ. இன்ரர்நஷனல் ரிக்ருட்மென்ற் கன்சல்றன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிடமிருந்து (பணிப்பாளர்கள் கோட்டை, கோட்டை ரோட், வீரசிங்ஹ கார்டன், இல. 540/ 12 ஐச் சேர்ந்த - திரு. அன்றன் அல்பேர்ட் இந்திரஜித் ஜோசப் இஷாம் யூசுப் மற்றும் திருமதி ரொஷான் யூசுப் (திருமணத்துக்கு முன் ஹசன்) முதலும் 2013.07.12 வரை வட்டியும் ஐம்பது இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து நூற்று அறுபத்து நான்கு ரூபா பதின்மூன்று சதம் (ரூ. 50,64,164.13) அத்துடன் நாற்பத்தெட்டு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து ஐநூற்று பதின்மூன்று ரூபா இருபத்துமூன்று சதத்தில் (ரூ. 48,28,513.23) ஆண்டுக்கு பத்தொன்பது தசம் ஐந்து சைபர் (19.50%) வீதத்தில் 2013.07.13 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்;

2. பிரசித்த நொத்தாரிசு திரு. பி. பி. ரணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2011.10.17 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 6547 மற்றும் 2011.12.22 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 6693 ஆகியவற்றின் பேரில் வருமதியாக ஐம்பது இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து நூற்று அறுபத்து நான்கு ரூபா பதின்மூன்று சதம் (ரூ. 50,64,164.13) அத்துடன் 2013.07.13 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிடப்பட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்தவாறு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு, இல. 50/ 3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ. என்ட். எச். ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கி, பொரளை மேற்தரக் கிளை, கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது"

#### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கம்பஹா பதிவுப் பிரிவில் சியனே கோரளை அதிகாரி பற்றுவில் பியகம பிரதேச சபை எல்லைகளுள் மாகொல தெற்கில் அமைந்த வரிமதிப்பிலக்கம் 89 ஐக் கொண்ட தெவட்டகஹலந்த என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஜே. நாணயக்கார தயாரித்த 1963, திசெம்பர் 08 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 872 இல் விபரித்த துண்டு D என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஜே. நாணயக்கார தயாரித்த 1963, பெப்புருவரி 27 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 860 இல் துண்டு 1 உம் ; கிழக்கிலும் தெற்கிலும் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 860 இல் துண்டு II உம் (பாதை ஒதுக்கம்) ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 872 இல் துண்டுகள் E மற்றும் H உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 872 இன்படி முப்பது தசம் ஐந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 30.5பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் அங்கு வளர்ப்பவையும் ஆகும். இது கம்பஹா காணிப் பதிவகத்தில் C 660/300 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட மாகொலயில் அமைந்த தெவட்டகஹலந்த என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஜே. நாணயக்கார தயாரித்த 1963, பெப்புருவரி 27 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 860 இல் விபரித்த துண்டு II (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 860 இல் துண்டுகள் 12 மற்றும் 10 உம் , P.W.D. ரோட்டும்; கிழக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 860 இல் துண்டுகள் 2, 4, 5 மற்றும் 6 உம் ; தெற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 860 துண்டுகள் 6, 7, 8 மற்றும் 9 உம் ; மேற்கில் : குறிப்பிட்ட வரைபடம் இல. 860 இல் துண்டுகள் 1, 12, 9 மற்றும் 10 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 860 இன் படி முப்பது பேர்ச்சு (0ஏ. 0றூ. 30பே.) விஸ்தீரணமுடையது. இது கம்பஹா காணிப் பதிவகத்தில் C 103/53 இல் பதிவு செய்யப்பட்டது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஏ. எம். ஆர். டி. சுபசிங்ஹ,
பிரதான முகாமையாளர்,

இலங்கை வங்கி,
பொரளை, மேற்தரக் கிளை.

9-707

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2013.08.13 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்த தாவது-

1. "பிரசித்த நொத்தாரிசு திரு. பி. பி. ரணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2012.05.02 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 6860 இன் பேரில் இல. 30/15B, பெரேரா கார்டன்ஸ், பெலவத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரியைச் சேர்ந்த சன்வோ குளோபல் (பிறைவேட்) லிமிட்டெட்டிடமிருந்து (பணிப்பாளர்கள் - திரு. மத்தும பட்டபெந்திகே சமிந்த நந்த குமார மற்றும் திருமதி துஷாரி கஸ்தூரி ஆரச்சி மத்தும பட்டபெந்தி) முதலும் 2013.07.19 வரை வட்டியும் ஒரு கோடியே எண்பத்துமூன்று இலட்சத்து நாற்பதாயிரத்து நூற்று அறுபத்தெட்டு ரூபா பதினேழு சதம் (ரூ. 1,83,40168.17) அத்துடன் ஒரு கோடியே அறுபத்தெட்டு இலட்சத்து பதின்நான்காயிரத்து தொளாயிரத்து நாற்பத்தொன்பது ரூபா பதினொரு சதம் (ரூ. 1,68,14,949.11) ஆண்டுக்கு பதினைந்து (15%) வீதத்தில் 2013.07.20 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்;

2. பிரசித்த நொத்தாரிசு திரு. பி. பி. ரணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2012.05.02 ஆந் திகதியிட்ட மேற்குறிப்பிட்ட முறி இல. 6860 இன் பேரில் வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஒரு கோடியே எண்பத்துமூன்று இலட்சத்து நாற்பதாயிரத்து நூற்று அறுபத்தெட்டு ரூபா பதினேழு சதம் (ரூ. 1,83,40168.17) அத்துடன் 2013.07.20 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிடப்பட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு, இல. 50/ 3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. ரீ. அன்ட் எச். ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, பொரளை, மேற்தரக் கிளை, கிளை முகாமையாளருக்கு இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது"

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை, பல்லே பத்துவில் கடுவல பிரதேச சபை எல்லைகளுக்குள் பஹல போமிரிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் பஹல போமிரியவில் அமைந்த லனரோல் மாவத்தை, வரிமதிப்பிலக்கம் 46/2 ஐக் கொண்ட தெவட்ட ஓவிட்ட என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் (மிகவும் சரியானவர்) எல். ஆர். ஜயசுந்தர (எனினும் எஸ். ராமகிருஷ்ணன் என பதிவு செய்த) தயாரித்த 2003.09.30 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2375 B இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டு 1 உம் ; கிழக்கில் : துண்டு 1 மற்றும் 6.0 மீ. அகல ரோட்டும் ; தெற்கில் : ரோட்டும் ; மேற்கில் : துண்டு 2 உம் அகுரு எலயும் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் (1ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மண், மரம், பயிர் மற்றும் சகலதும் ஆகும். இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் G 1900/ 169 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஏ. எம். ஆர். டி. சுபசிங்ஹ,
பிரதம முகாமையாளர்,

மேற்தரக் கிளை,
இலங்கை வங்கி,
பொரளை,

9-708

---

## மக்கள் வங்கி - லக்கி பிளாசா

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2013.07.10 ஆந் திகதீ நடைபெற்ற அவர்களின் கூட்டத்தில் பின்வரும தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"சமன் என்டர்பிரைசஸ்" என்ற பெயர் மகுடத்தின் கீழ் பங்காண்மையைக் கொண்டு நடாத்துகின்ற சமன் ஜயவிலால் சமரதுங்க மற்றும் பொல்வத்த கமகே பிரியங்கனி ரேணுகா என்போர், மக்கள் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி எஸ். டி. என். பிரேமதாச என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012.04.26 ஆந் திகதிய 1180 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது வருமதியாகவுள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர். ஆதலால், சொல்லப்பட்ட 1180 ஆம் இலக்க முறியின்மீது ஒரு கோடியே ஐம்பத்தைந்து இலட்சத்து இருபத் தோராயிரத்து முந்நூற்று இருபத்தொரு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 1,55,21,321.90) கொண்ட தொகை இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும், சேரவேண்டியுமுள்ளது. ஒரு கோடியே ஐம்பத்தைந்து இலட்சத்து இருபத்தோராயிரத்து முந்நூற்று இருபத்தொரு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 1,55,21,321.90) கொண்ட மொத்தத் தொகையை, 2013.06.01 ஆந் திகதி முதல் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் (ரூ. 1,50,00,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு 22 வீதப்படியான மேலதிக வட்டியுடன், செலவுத் தொகைகளையும், வேறு விற்பனை இறுப்பனவுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவு (ஏதேனும்) பெறப்பட்டிருப்பின் அதனைக் கழித்து அறவிடுவதற்காகச் சொல்லப்பட்ட 1180 ஆம் இலக்க ஈட்டுமுறியினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சோந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஏர்வின் பெரேரா என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர்

சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சியன கோறளை யின் அதிகாரி பத்துவில் தல்வத்தவில் அமைந்துள்ளதும், அதன் மீதுள்ள கட்டிடங்களுடனும், எல்லாவற்றுடனும் "அட்டிக்ககஹா வத்த", "கட்டகெலகஹாவத்த", "மதின்ன வத்த" மற்றும் "ஜம்புகஹா வத்த' எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவை யாளர் டபிள்யூ. ஜீ. சுனில் சோமசிறி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.03.13 ஆந் திகதிய 886 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டதும், "காணித்துண்டம் 1" என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்க லும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடை யது - வடக்கில் : பியகம வீதி; கிழக்கில் : பீ. கருணாரத்ன மற்றும் எஸ். பெரேராவினால் உரிமை கோரப்பட்ட காணி; தெற்கில் : வீதி மற்றும் ; மேற்கில் : வீதி; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 886 ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினாறு தசம் ஒன்பது ஒன்று பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 16.91பே.) கொண்டுள்ளதுடன், கொழும்புக் காணிப் பதிவகத்தில் C 762/114 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிராந்திய முகாமையாளர்,
(கொழும்பு தெற்கு).

பிராந்திய தலைமை அலுவலகம் (மேற்கு வலயம் 01),
மக்கள் வங்கி,
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

9-859

---

**நேஷன்ஸ் டிரஸ்ட் ப வ க**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை மீள அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் டிரஸ்ட் பவக வின் பணிப்பாளர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்த அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகள் கடன்களை மீள அறவிடும் (விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 08 ஆம் பிரிவிற்கிணங்க, நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பவக வின் பணிப்பாளர்கள் சபை 31.07 2013 அன்று பின்வரும் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி யுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சுமித் தென்னந்தும்பு கைத்தொழில் (பிரைவேட்) லிமிட்டெட்

"கொழும்பு பிரசித்த நொத்தாரிசு N.S.கலன்சூரிய அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், 1263 ஆம் இலக்கமும், 24 செத்தெம்பர் 2010 திகதியும் கொண்ட ஈட்டு முறியின் பிரகாரம் ஈடுவைப்பவரென்றவகையில் "சுமித் தென்னந்தும்புக் கைத் தொழில் (பிரைவெட்) லிமிட்டெட்" இத்தோடுள்ள அட்டவணையில் மேலும் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம், வளவு, மற்றும் அதன் உரிமைகளை இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 இல் உள்ள நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பவக விற்கு சாதகமாக குறிப்பிட்ட "சுமித் தென்னந்தும்புக் கைத்தொழில் (பிரைவேட்) லிமிட்டெட்" பெற்றுக் கொண்ட கடன்களை உரிய முறையில் மீளச் செலுத்துவதற்கு பிணைப்பொறுப்பாக ஈடு மற்றும் அடமானம் வைத்துள்ளமையாலும், குறிப்பிட்ட "சுமித் தென்னந்தும்புக் கைத்தொழில் (பிரைவெட்) லிமிட்டெட்" குறிப்பிட்ட ஈட்டு முறியின் பிணைப்பொறுப்பின் பேரில் பெற்றுக்கொண்ட கடன்களை மீளச் செலுத்துவதற்குத் தவறியுள்ளமையாலும்,

30.04.2013 அன்றுள்ளபடி வரவேண்டிய தொகையாகிய எழுபத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்றையாயிரம் ரூபா (79,95,000) பொதிசெய்தல் நாணயக் கடன் மீது உடன்பாடு கண்டவாறு 01.05 2013 இலிருந்து சேர்ந்து பெருகிய மேலதிக வட்டியுடன் சேர்த்து வர வேண்டிய தெகை மற்றும் 30.04.2013 அன்றுள்ளபடி வரவேண்டிய தொகையாகிய பதின்நான்கு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து இருநூற்று நாற்பத்தைந்து ரூபா இருபத்தியொரு சதம் (14,48,245.21) மேலதிக பற்று வசதி காரணமாக உடன்பாடு கண்டவாறு 01.05.2013 இல் இருந்து சேர்ந்து பெருகிய மேலதிய வட்டியுடன் சேர்த்து மொத்தத் தொகையாகிய ஒரு கோடியே மூன்று இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து தொளாயிரத்து இருபத்தொரு ரூபா எண்பத்தெட்டு சதம் (1,03,46,921.88) உரிய ஆகு செலவுகள், நியதிச்சட்ட அறவீடுகள், விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு ஏதாவது விதிப்பனவுகளுடன் சேர்த்து கொடுப்பனவு ஏதும் இடம் பெற்றிருந்தால் அதைக் கழித்துக்கொண்டு மீள அறிவிடும் வகையில் 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகள் கடன்களை மீள அறிவிடும் (விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இத்தோடுள்ள அட்டவணையில் மேலும் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம், வளவு, மற்றும் அதன் உரிமைகள் கொழும்பு திரிவாங்க மற்றும் சேனநாயக்க ஏலதாரர் அமைப்பைச் சேர்ந்த திரு. திரிவாங்க C. சேனநாயக்கவினால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவேண்டு மென்று இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

வடமேல் மாகாணம், புத்தளம் மதுரங்குளி கிராமம், மணக்கும்புக் கட்டுவ வீதியில் அமைந்துள்ளதும் , உரிமம் பெற்ற நில அளவையாளர் A. O. M. நஜீப் அவர்களின் 2511 ஆம் இலக்கமும், 08.04.2010 ஆந் திகதியுங்கொண்ட காணி வரைபடத்திட்டத்தில் துண்டு 1 எனக் காண்பிக்கப்பட்டுள்ளதுமான பிரித்து வரைபுபடுத்தப்பட்ட உனா வெளிக்காணி அல்லது பட்டயம் என அழைக்கப்படும் காணியும், அதிலுள்ள மரங்கள், தோட்டப்பயிர்கள், மற்றும் ஏனைய அனைத்தும் உள்ளடங்களாக . குறிப்பிட்ட துண்டு 1 எனப்படும் இதன் எல்லைகள்– வடக்கு: செல்டன் உரிமை கோரும் காணி மற்றும் மகாகும்புக்கடவல வீதி; கிழக்கு : செய்னுல் ஆம்தீன் மற்றும் கமிலஸ் உரிமைகோரும் காணி; தெற்கு : கமிலஸ் உரிமைகோரும் மற்றும் மேற்கு : விக்டர் மற்றும் செல்டன் உரிமைகோரும் காணி மற்றும் ஆர். கனகரத்தினம் வரைந்த 6635 ஆம் இலக்கமும், 18.08.1996 ஆந் திகதியுங்கொண்ட காணி வரைபடத்தில் துண்டு 1 எனக் காண்பிக்கப்பட்ட காணி. குறிப்பிட்ட 2511 ஆம் இலக்கங் கொண்ட காணி வரைபடத்தின் பிரகாரம் அதன் விஸ்தீரணம் இரண்டு ஏக்கர் (2ஏ. 0றூ. 0பே.) ஆகும். குறிப்பிட்ட 2511 ஆம் இலக்கங்கொண்ட காணி வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்படுவது, கீழே 260/A/ 6 என்னும் இலக்கங்கொண்ட

வரைபடத்தித்திட்டத்தில் மேலும் விபரமாகக் குறிப்பிடப்படும் துண்டு 1 இன் மீள் அளவீடு ஆகும்.

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மதுரங்குளி கிராமம், புத்தளம் பற்று மேற்கில் அமைந்துள்ளதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜே. ஏ. வீ. ராஜநாயகம் தயாரித்த 260/A/6 ஆம் இலக்கமும், 25.07.2005 ஆந் திகதியுங்கொண்ட காணி வரைபடத்தில் துண்டு 1 எனக் காண்பிக்கப்பட்டுள்ளதுமான உனாவெளிக் காணி அல்லது பட்டயம் என அழைக்கப்படுவதுமான பிரித்து வரையறுக்கப் பட்ட துண்டுக் காணி மற்றும் அதிலுள்ள மரங்கள், தோட்டப் பயிகள் மற்றும் ஏனைய அனைத்தும் உள்ளடங்கலாக. குறிப்பிட்ட துண்டு 1 இன் எல்லைகள் - வடக்கு: வீதியும் ஒரு பாதையும் ; கிழக்கு : செய்னுல் ஆப்தீன் உரிமைகோரும் காணி; மேற்கு : பாதையும், நந்தனி உரிமைகோரும் காணியும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஆர். கனகரத்தினம் தயாரித்த 6635 ஆம் இலக்கமும், 18.08.1996 ஆந் திகதியுங்கொண்ட காணி வரைபடத்தில் துண்டு 1 எனக் காண்பிக்கப் பட்டதுமான காணியும், இதன் விஸ்தீரணம் குறிப்பிட்ட 260/A/6 காணி வரைபடத்தின் பிரகாரம் இரண்டு ஏக்கர் (2ஏ. 0றூ. 0பே.) ஆகும். இது புத்தளம் காணிப் பதிவகத்தில் P/54/294 இன் கீழ் பதிவு பெற்றுள்ளது.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனி செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02.

9-921

---

**மக்கள் வங்கி - கொள்ளுப்பிட்டி குவாப் ஹவுஸ்**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2013.01.24 ஆந் திகதி நடைபெற்ற அவர்களின் கூட்டத்தில் பின்வரும தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"திரு. கொடிப்பிலி ஆராச்சிகே ஹர்ஷன சஞ்ஜீவ தர்மசிறி என்பவர், மக்கள் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி எஸ். டி. என். பிரேமதாச என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010.08.31 ஆந் திகதிய 127 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி எம். ஜீ. கே. எம். மீகம என்பவரால் அத்தாட்சிப்படுத் தப்பட்ட 2011.10.22 ஆந் திகதிய 1809 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலால், சொல்லப்பட்ட முறையே 127 ஆம், 1809 ஆம் இலக்க முறிகள் மீது பதின்நான்கு இலட்சத்து இருபத்தேழாயிரத்து எழுநூற்று நாற்பத்து மூன்று ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 14,27,743.49) கொண்ட தொகையும், முப்பத்துமூன்று இலட்சத்து எண்பதாயிரத்து நாநூற்று எட்டு ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 33,80,408.92) கொண்ட தொகையும் இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும், சேரவேண்டியுமுள்ளது.

முறையே 2012.07.31 மற்றும் 2012.07.20 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை பதின்நான்கு இலட்சத்து இருபத்தேழாயிரத்து எழுநூற்று நாற்பத்து மூன்று ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 14,27,743.49) கொண்ட தொகையையும், பதின்நான்கு இலட்சத்து இருபத்தேழாயிரத்து எழுநூற்று நாற்பத்து மூன்று ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 14,27,743.49) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு பதினெட்டு சதவீத (18%) மேலதிக வட்டியையும், மற்றும் முப்பத்துமூன்று இலட்சத்து எண்பதாயிரத்து நாநூற்று எட்டு ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 33,80,408.92) கொண்ட தொகையையும், முப்பத்துமூன்று இலட்சத்து எண்பதாயிரத்து நாநூற்று எட்டு ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூ. 33,80,408.92) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு பதினாறு சதவீத (16%) மேலதிக வட்டியையும், செலவு தொகைகளையும் வேறு விற்பனை இறுப்பனவுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவு (ஏதேனும்) பெறப்பட்டிருப்பின் அதனைக் கழித்து அறவிடு வதற்காகச் சொல்லப்பட்ட 127 ஆம், 1809 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சோந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஏர்வின் பெரேரா என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்திலுள்ள சியன கோறளையின் மெத பத்துவில் கம்பஹா பிரதேச சபை எல்லைகளினுள் கம்பஹா அளுத்கம கிராமத்தில் அமைந்துள்ளதும் அதன் மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மறறும் வேறெல்லாவற்றுடனும் "இந்திகொல்லலந்த" எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளரும் மட்டப்படுத்துநருமான திரு. . ஏ. ஏ. பீ. ஜயந்த பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010.01.25 ஆந் திகதிய 2321 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : இதன் காணித்துண்டம் 1 உம் 3065 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் A1 உம் ; கிழக்கில் : திரு. டபிள்யூ. ஆரியபாலவுக்கும் குமார் வத்தகொடவுக்கும் சொந்தமான காணிகள் ; தெற்கில் : அர்ச். ஜுட்ஸ் திருச்சபைக்குச் சொந்தமான காணி; மேற்கில் : இதன் காணித்துண்டங்கள் 1 மற்றும் 4.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிராந்திய முகாமையாளர்,
(கொழும்பு தெற்கு).

பிராந்திய தலைமை அலுவலகம் (மேற்கு வலயம் 01),
மக்கள் வங்கி,
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

9-860

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.